DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.123 /2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-7 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கணேசன் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 to A4 absent. u/s 355 BNSSpetition filed anda llowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 16.03.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் திருவாடானை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி கடந்த 31.01.2023 தேதி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 10.09.2017 தேதி இரவு 19.45 மணிக்கு நான் நிலைய பொறுப்பில்இருந்தபோது திருவாடானை காவல்நிலைய மு.நி.கா. 1828 திரு சுபாஷ் சந்திரபோஷ் என்பவர் ஏற்கனவே மனு ரசீது எண் 251/17 ரசீது வழங்கி எனது பார்வைக்கு வைத்திருந்த புகார் மனுவை பார்வையிட்டு விசாரணை செய்து மனுவின் தன்மைக்கேற்ப திருவாடானை காவல் நிலைய குற்ற எண். 256/17 u/s 294(b),324,506(ii)IPC

படி முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்தேன்,. அந்த முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2.அதன்பின் 11.09.2017 தேதி காலை 7.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் துரைகண்ணன், கருப்பையா ஆகியோரை முன்னைிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வைமகசர் அ.சா.ஆ.5 ஆகவும் மாதிரி வரைபடம அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

3 பின்பு அன்றைய தினமே புகார்தாரர் சீராளன், சாட்சிகள் காளியம்மாள், யோகினி, பார்வைமகசர் சாட்சிகள் துரைகண்ணன், கருப்பையா ,மனு ரசீது வழங்கிய காவலர் சுபாஷ்சந்திரபோஷ் ஆகியோரை விசாரித்து தனி தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின் சாட்சிகள் யோகினி, காளியம்மாள் ஆகியோருக்கு மருத்துவ சிகிச்சை வழங்கிய திருவாடானை அரசு மரு த்துவமனை மருத்துவர் திருமதி.அமுதா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி காளியம்மாள், யோகினிக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என அவர் கொடுத்த காயச்சான்றிதழை தனி தனியே பெற்றேன்.

4. வழக்கின் எதிரிகள் கார்த்திக், சண்முகம், பூர்ணம், சண்முகபிரியா ஆகியோர் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் அவர்கள் மீது கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.அதன்பின் வழக்கின் விசாரணை முழுமையாக முடிவடைந்தபின் எதிரிகள் மீது u/s 294(b),324,506(ii)IPC கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல்செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதி 09.09.2017 தேதி காலை 6 மணி என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமாா 10 கிலோமீட்டர் தூரம் இருக்கும். சம்பவயிடத்தில் இருந்து காவல்நிலையத்திற்கு இருசக்கர, அல்லது நான்கு சக்கர வாகனங்களில் சுமார் அரை மணிநேரத்தில் வந்துவிடலாம். சம்பவமானது 6 மணிக்கு நடைபெற்று இ,ருநதால் 6.30 மணியளவில் காவல்நிலையம் வந்துவிடமுடியும் என்றால் சரிதான். புகார்தாரர் மாலை 5 மணிக்கு தான் வந்து புகார் கொடுத்தார் என்றால் சரிதான். புகார்தாரர் புகார்அளிப்பதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் பாதை பிரச்சனை தொடர்பாக முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான்.

2. சாட்சி காளியம்மாள் புகார்தாரரின் மனைவி என்றும் சாட்சி யோகினி புகார்தாரரின் மகள் என்றாலும் சரிதான். பார்வைமகசர் சாட்சிகள் புகார்தாரரின் ஊரை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகே உள்ள நபர்களிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதாதன். சாட்சி சொல்ல யாரும் முன்வரவில்லை. வழக்கு சம்பவம் உண்மையாக நடைபெற்று இருந்தால் அருகில் உள்ள நபர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருப்பேன் என்றும் வழக்கு சம்பவம் உண்மையாக நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அ.சா.2, அ.சா.3 யை தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் அருவாள்,கம்பியை இவ்வழக்கில் கைப்பற்றவில்லை என்றா்ல் சரிதான். உண்மையாக அருவாள், கம்பியை கொண்டு தாக்கிகிருந்தால் அதனை கைப்பற்றியிருப்பேன் என்றும் இல்லாததால் தான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அசா.2, அசா.3 மருத்துவமனையில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் வைத்து விசாரிக்கவில்லை. ஆனால் புகார் பெற்றபின்அவர்களை விசாரித்தேன்.

3. அ.சா.2 அ.சா.3 அவர்களுக்கு வேறுவிதமாக ஏற்பட்ட காயத்தை வைத்து மருத்துமவனையில் சிகிச்சை பெற்றுள்ளார்கள் என்றும் அதனால்தான் அவர்களை மருத்துவமனையில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் புகார்தாரருக்கு எதிரிகள் மீதுள்ள முன்விரோதம் மனதில் வைத்து கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றும் அதை சரிவர விசாரணை செய்யாமல் நான் குற்ற இறுதியறிக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.